முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**22.04.2021**, வியாழக்கிழமை

1. தரும சக்தியே ஞான தேசிகா
தவபலம் தன்னை மக்களுக்கு
கரும வினை மாற்றும் சக்தியாக்கி
கருணைபட அருளும் அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
அருளுவேன் யோகபிரசன்ன ஆசி
வரங்களாக பிலவ தகர் திங்கள்
வழங்குவேன் நவ திகதி குருவாரம்
**(**பிலவ வருடம் சித்திரை மாதம் **9**ம் நாள், **22.04.2021** வியாழக்கிழமை**)**
3. வாரமதில் கணம்புல்ல நாயனாரும்
வழங்குவேன் உலக நலம் காண
ஆறுமுக சூட்சும சக்தியான
அரங்கமகான் உண்மை நெறி
4. நெறியை ஏற்று கலியுகத்தார்
நீதிவழி தருமவழி என வர
வறுமைத் துன்பங்கள் ஓடும்
வளமும் பலமும் காணும்
5. காணுகின்ற உலகப் பேரிடரும்
கந்த வேலன் நாமசெபம்போற்றி
ஞான தேசிகன் வழிக்கு வர
நம்பகம் வைத்து சீடர்களாகி
6. சீடர்களாகி தருமம் தொடர
சேவை நோக்கம் வளர்த்திட
இடர்களெல்லாம் தானாய் ஓடும்
இயற்கையே மாற்றம் செய்யும்
7. செய்யவே உலக மெங்கிலும்
சிறப்பான தரும சக்தி பரவி
அய்யன் முருகன் வழிபாடு பெருகி
ஆறுமுக அரங்கனே சிறந்த குரு எனும்
8. சிறந்த குரு எனும் சூட்சுமம்
சித்தம் தெளிந்து வர வேணும்
பரந்த உலகம் எங்கிலும்
பரமஞானி அவதாரம் அறியப்பட
9. அறியப்பட உலகம் தானும்
ஆபத்தில்லா நிலை காணும்
பேரிடரையும் வென்று மீளும்
பெருமைமிக்க ஆளுமை காணும்

10. காணவே ஓங்கார குடிலின்
கருணை மிக்க சேவை தனில்
தானாக வந்திணைந்து உலகோர்
தருமம் செய்து தயவை பெருக்க

11. பெருக்கவே உலகம் மாற்றம்
பெருந்தயவாகி சடுதி அடையும்
கருத்தாக வேலவன்ஆசிபட பாதுகாப்புறும்
கண்டுரைத்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–